


# மழலைப்பாடல்கள் போட்டி 2024

**பொங்கல் விழா 2024**

## பிரிவுகள்

| | |
|---|---|
| அரும்பு | மழலை நிலை மாணவர்கள்<br>Pre-k 1 and Pre-k2 students |
| மொக்கு | அடிப்படை நிலை மற்றும் வகுப்பு-1 மாணவர்கள்<br>Kindergarten & Grade-1 Students |
| மொட்டு | உயர் அடிப்படை நிலை மாணவர்கள், வகுப்பு 2,3 மாணவர்கள்<br>Advanced KG, Grade 2, 3 Students |
| மலர் | வகுப்பு 4, 5 மாணவர்கள்<br>Grade 4, 5 Students |
| பூ | வகுப்பு 6,7,8 மாணவர்கள்<br>Grade 6,7,8 Students |

## போட்டி விதிமுறைகள்

- இந்தக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள மழலைப்பாடல்கள் மட்டுமே போட்டிக்கான பாடல்கள்.

- அரும்பு, மொக்கு, மொட்டு பிரிவு மாணவர்கள் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒவ்வொரு மாணவரும் அதிகபட்சமாக இரண்டு மழலை பாடல்களைப் பாடலாம்.

**வெற்றியைத் தீர்மானிக்கும் காரணிகள்**

பாடல்களை பாடும் விதம், நடித்துக் காட்டுதல் போன்றவை சார்ந்து வெற்றியாளர்கள் தீர்மானிக்கபடுவார்கள்.

**நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

The illustrations accompanying the rhymes in this book were created using Artificial Intelligence software. All copyrights for these images are held by Vallalar Tamil School.
© Vallalar Tamil School

**மரம் வளர்ப்போம்**

தாத்தா வைத்த தென்னையுமே,
தலையால் இளநீர் தருகிறது!

பாட்டி வைத்த கொய்யாவும்,
பழங்கள் நிறைய கொடுக்கிறது!

அப்பா வைத்த மாஞ்செடியும்,
அல்வா போல பழம் தருது!



## முயல்

வெள்ளை முயல் ஓடுது
வேகமாக ஓடுது

குள்ள முயல் ஓடுது
குதித்துக் குதித்து ஓடுது

முத்துப் போன்ற கண்ணினால்
மேலும் கீழும் பாக்குது

தத்தித் தத்தி விண்ணிலே
தாவிக் குதிக்கப் பாக்குது

நெட்டையான காதையே
நீட்டி நீட்டி ஆட்டுது

குட்டையான வாலையே
குறு குறுன்னு ஆட்டுது



**எங்கே போறீங்க?**

கிளியக்கா கிளியக்கா
எங்கே போறீங்க?

கிளையிலே பழமிருக்கு
கொத்த போறாங்க !

சிட்டுக் குருவி சிட்டுக் குருவி
எங்கே போறீங்க?

சின்னச்சின்ன நெல்மணியைத்
தேடி போறங்க!

ஆத்துமீனே ஆத்துமீனே
எங்கே போறீங்க?

அருவியிலே நீச்சலடிச்சிப்
பார்க்கப் போறாங்க!

மயிலக்கா குயிலக்கா
எங்கே போறீங்க?

மதுரைக்குத்தான் குதிரையேறி
போகப் போறாங்க!



**எங்கள் மொழி நல்ல மொழி**

எங்கள் மொழி நல்ல மொழி
இனிமையாக பேசும் மொழி

அன்னை சொல்லி தந்த மொழி
அன்பொழுக பேசும் மொழி

பள்ளி சென்று கற்கும் மொழி
பக்குவமாய் பேசும் மொழி

நாள்தோறும் உதவும் மொழி
நல்ல தமிழ் எங்கள் மொழி



**என் பந்து**

சின்ன சின்ன பந்து
சிறுமி ஆடும் பந்து

வண்ண வண்ணப் பந்து
வானில் பாயும் பந்து

குட்டிக் கையால் தட்டினால்
குதித்து ஓடும் பந்து

எட்டி ஓங்கி உதைத்தால்
எங்கோ போகும் பந்து



## வானம் கறுத்தால் மழை பெய்யும்



**டம் டம் ... டும் டும் ... கச்சேரி**

காக்கா அந்தப் பக்கம் கா கா கா ...
கிளி இந்தப் பக்கம் கீ கீ கீ ...

குயில் மரத்தில் கூ கூ கூ ...
கோழி கூரையில் கொக் கொக் கொக் ...

பசுவும் கன்றும் மா மா மா ...
பதுங்கும் பூனை மியாவ் மியாவ் மியாவ் ...

மேயும் ஆடு மே மே மே ...
காக்கும் நாய் லொள், லொள், லொள் ...

டம் டம் ... டும் டும் ... கச்சேரி
நடக்குது பாரு ஊருக்குள்ளே.



**பள்ளிக்கூடப் பையிலே**

பள்ளிக்கூடப் பையிலே
பாடப்புத்தகம் இருக்குது

பாடப்புத்தகம் இருக்குது
பலகை ஒன்றும் இருக்குது

பையைத் தோளில் மாட்டுவேன்
பள்ளிக்கூடம் செல்லுவேன்

பள்ளிக்கூடம் செல்லுவேன்
படித்த பாடம் சொல்லுவேன்

ஆண்டுதோறும் தேறுவேன்
அறிஞனாக மாறுவேன்

அறிஞனாக மாறுவேன்
அனைவருக்கும் உதவுவேன்



**வா, மழையே, வா**

கத்தி கப்பல் செய்து வைத்தேன்
கால்வாய் கூடத் தோண்டி வைத்தேன்

வா, மழையே, வா
வா, மழையே, வா

சின்ன செடியை நட்டு வைத்தேன்
செப்புக் குடத்தை எடுத்து வைத்தேன்

வா, மழையே, வா
வா, மழையே, வா

வீதிப் பக்கம் வந்து நின்றேன்
மேலே மேலே பார்த்து நின்றேன்

வா, மழையே, வா
வா, மழையே, வா



**அதோ பாராய் !**

குதித்துக் குதித்தே ஓடும்
குதிரை அதோ பாராய்

அசைந்து அசைந்து செல்லும்
ஆனை இதோ பாராய்

பறந்து பறந்து போகும்
பருந்து அதோ பாராய்

நகர்ந்து நகர்ந்து செல்லும்
நத்தை இதோ பாராய்

தத்தித் தத்திப் போகும்
தவளை அதோ பாராய்

துள்ளித் துள்ளி நாமும்
பள்ளி செல்வோம் வாராய்



**வானத்தில் பறக்கும்**

வானத்தில் பறக்கும் பிளேனைப் பார்
மாயமாய் மறையும் அழகைப் பார்

பூமியில் வந்து இறங்குது பார்
வேகமாய் சீறி வருகுது பார்

கடலிலே கப்பல் மிதக்குது பார்
கரையைத் தேடி வருகுது பார்

கப்பலில் கொடியும் பறக்குது பார்
காற்றிலே அசையும் அழகைப் பார்

பெட்டி பெட்டியாய் செல்லும் ரயிலைப் பார்
இரும்புப் பாதையில் இயங்கும் காட்சியைப் பார்

இரவிலும் பகலிலும் இயங்கிடுமே
தூங்கும் போதும் ஓடிடுமே

விதவிதமான வாகனங்கள்
விளையாட எனக்கு வாங்கித்தாருங்கள்



**குருவி பறந்து வந்ததாம்**

குருவி பறந்து வந்ததாம்
குழந்தை அருகில் நின்றதாம்

பாவம் அதற்கு பசித்ததாம்
பாப்பா பிஸ்கட் கொடுத்ததாம்

காலில் இடுக்கிக் கொண்டதாம்
கடித்துக் கடித்துத் தின்றதாம்

களைப்பு தீர்ந்து பறந்ததாம்
காலையில் திரும்பி வந்ததாம்



**யானை**

யானை பெரிய யானை!
யார்க்கும் அஞ்சா யானை!

பானை வயிற்று யானை!
பல்லைக் காட்டா யானை!

முறத்தைப் போலக் காது!
முன்னால் வீசும் யானை!

சிறிய கோலிக் குண்டாம்!
சின்னக் கண்கள் யானை!

முன்னங் காலை மடக்கி
முட்டி போட்டுப் படுக்கும்!

சின்னக் குழந்தை ஏற்றிச்
சிங்காரமாய் நடக்கும்!



**ஒன்றும் ஒன்றும்**

ஒன்றும் ஒன்றும் இரண்டு
பூவில் இருப்பது வண்டு

இரண்டும் இரண்டும் நான்கு
இனிப்பாய் இருக்கும் தேங்காய்

மூன்றும் மூன்றும் ஆறு
வேலை செய்தால் சோறு

நான்கும் நான்கும் எட்டு
நன்றாய்ப் பாடுவாள் பட்டு

ஐந்தும் ஐந்தும் பத்து
அன்பே நமது சொத்து



**பொம்மை**

அம்மா தந்த பொம்மை
அழகழகு பொம்மை
தலையை ஆட்டும் பொம்மை
தஞ்சாவூரு பொம்மை
தாளம் தட்டும் பொம்மை
தாவி ஓடும் பொம்மை
நான் விரும்பும் பொம்மை
நல்ல கரடி பொம்மை






# மழலைப்பாடல்கள் போட்டி 2024